கண்டறியப்பட்டிருக்கிறது. SIDCO *நிருவாகமும், மாவட்ட நிருவாகமும் கலந்தாலோசித்து, இப்பணி தொடர் நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர், திரு. க. சுந்தர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், அண்ணாத்தூர் மற்றும் சிறுபினாயூர் கிராமத்தில் புதிய தொழிற்பேட்டை அமைப்பது குறித்து கோரிக்கை விடுத்திருக்கிறார். அதுசம்பந்தமாக மாவட்ட நிருவாகத்துடன் கலந்தாலோசித்து, SIDCO *நிருவாகம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-05

மாண்புமிகு நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர், திரு. சபா. ராசேந்திரன் அவர்கள் தனது தொகுதிக்குட்பட்ட பண்ருட்டி ஒன்றியம், காடாம்புலியூர் கிராமத்தில் ஒரு புதிய தொழிற்பேட்டை அமைப்பது சம்பந்தமாக காடாம்புலியூர் கிராமம் சர்வே எண் 642/3-ல், 13.95 ஹெக்டேர் கல்லாங்குத்து நிலப் பரப்பில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்காகக் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதுசம்பந்தமாகவும் மாவட்ட நிருவாகத்துடன், SIDCO *நிருவாகம் தொடர் நடவடிக்கையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

259—

தமிழ் ஆராய்ச்சி பல்கலைக்கழகம்

***35486—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூலை 3]

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகிய அமைப்புகளின் வாயிலாக நாடெங்கும் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் தமிழ் ஆய்வு குறித்த பயிலரங்குகள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருவதால், குமரி மாவட்டத்தில் மட்டுமல்லாமல் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள தமிழ் ஆராய்ச்சிப் பணிகளை, ஆய்வு நுழைவுவாயில் Research Portal *மூலமாக ஒருங்கிணைப்பதால், தனியாக குமரி மாவட்டத்தில் தமிழ் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டியதன் அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்குப் புகழ் சேர்த்தது கன்னியாகுமரி மாவட்டம். தமிழுக்கு மேன்மை கொடுத்தது கன்னியாகுமரி மாவட்டம். குமரியின் ஒரு பகுதியான முதல் தமிழ்ச் சங்கம் உருவான லெமூரியா கண்டத்தை கடல் கொண்டு சென்றது. இது வரலாறு.*

வள்ளுவர் வாழ்ந்த இடமாக கன்னியாகுமரி மாவட்டம் கருதப்படுகிறது. ஏனென்றால், கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழும் மக்கள் பயன்படுத்தும் சொற்கள், குறிப்பாக 'தண்ணீர்' என்ற சொல்லை 'வெள்ளம்' என்று சொல்வோம். திருக்குறளிலே கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மக்கள் பயன்படுத்தும் சொற்கள் அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதைப்போன்ற சொற்கள் திருக்குறளின் பல்வேறு இடங்களிலே இடம் பெற்றிருக்கின்றன. குமரி மாவட்டத்து மக்களின் பழக்க வழக்க சொற்களாகவும் இவை உள்ளதால், அவை ஏற்புடையதாக இருக்கிறது.

[*2018 ஜூலை 3*

தமிழுக்கு இலக்கணம் தந்த தொல்காப்பியர் மற்றும் அறங்கோட்டாசான் போன்றவர்கள் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நகைச்சுவை தமிழ் கலை வளர்த்த திரு. என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், தமிழ் நாடகத்திற்கு உயிரூட்டிய திரு. டி.கே.எஸ். சகோதரர்கள், திரு. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, திரு. சதாவதாணி சே.யூ. தம்பி பாவலர் போன்ற தமிழுக்குப் பெருமை சேர்த்த அத்துணை பேருமே கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள். சுமார் 250 ஆண்டுகளுக்குமேல் மலையாளிகளிடம் போராடி, பல்வேறு இன்னல்களை அனுபவித்து, பலரது உயிர்களை இழந்து, தமிழுக்காக, தமிழ் எல்லைக்காகப் போராடி குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் தியாகச் செயலால், கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது.

தமிழுக்குப் பேசிய அவரது வார்த்தையை நான் குறிப்பிட விரும்புகிறேன். 'தமிழை மறந்தவன் தாயை மறந்தவன்' என்ற வரி எங்களுடைய குமரி மாவட்டத்தை உருவாக்கிய மார்ஷல் நேசமணி அவர்கள் சொன்ன முதல் வரி. அப்படிப்பட்ட சரித்திரத் தலைவர்கள் போராடியதால் கன்னியாகுமரி மாவட்டம் 9-12-1956 அன்று தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. ஆகவே, தமிழுக்குப் போராடிய, தமிழுக்குப் பெருமை சேர்த்த கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பது சாலச் சிறந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு வாய்ப்பில்லை என்று சொன்னாலும், இதனை மறுபரிசீலனை செய்து கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உலகப் பெயர் பெற்ற களரி கலை, வர்மக் கலை, ஆயுர்வேதா, சித்தா கலை ஆகிய அனைத்தும் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் உதயமாகின. அதன் பிறகுதான் ஜப்பானுக்கு சென்று, கராத்தே கலையாகப் பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட கலைகளைத் தந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்று மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தின் தொன்மை, கலை பண்பாடு மற்றும் பாரம்பரியம் அனைவரும் அறிந்ததே.*

2018 ஜூலை 3]

அதனால் கன்னியாகுமரி அருங்காட்சியகத்திலும், கல்குளம் வட்டம், புலியூர்குறிச்சி கிராமத்தில் இருக்கிற உதயகிரிகோட்டை, De Lannoy *கல்லறை ஆகிய இரண்டு இடங்களிலும் தொல்லியல் துறை சார்பாகவும், கலை-பண்பாட்டுத் துறை சார்பாகவும் ஆய்வகம் மற்றும் ஒரு நூலகம் அமைக்க ஏற்கெனவே அரசு முடிவெடுத்திருக்கிறது. அருங்காட்சியகத்தை விரிவுபடுத்தும்போது, அங்கே மற்ற வரலாறுகள் மட்டுமல்லாமல், கலை, பண்பாட்டு வரலாறு மற்றும் தமிழ் இலக்கிய வரலாற்றையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பல முன்னோடிகளுடைய* Portraits/Panels *ஆகியவற்றையும் அந்த இடத்திலே உருவாக்கப் போகிறோம்.*

முற்பகல் 11-10

அதுபோக, தஞ்சையில் இயங்கிவரும் South Zone Cultural Centre, *மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் இயங்குகின்ற தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பாக ஒரு கலை கிராமம் தமிழகத்தில் அமைப்பதற்காக ரூபாய் 2 கோடி* allot *செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மூன்று கிராமங்கள் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் புரசை, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு கிராமம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு கிராமம் பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று கிராமங்களில் எந்த கிராமம் என்ற தேர்வு வெகுவிரைவில் நடைபெறும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, கண்டிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு கிராமத்தை கலை கிராமமாக உருமாற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க இருக்கிறோம். கன்னியாகுமரி மாவட்டத்தின் புராதனத் தன்மையையும், தொன்மையையும் தமிழக அரசு எப்போதுமே பாதுகாக்கும். அதற்கான முயற்சிகளை எடுப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுள்ள புள்ளிவிவரப்படி தமிழ் வளர்ச்சி விகிதம் குறைந்து வருகிறது. இதை* UNESCO *சொல்கிறது. மாற்று மொழிகள் எல்லாம் வளர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கின்றன. நாம்*

'தமிழ்' என்றும், 'தமிழன்' என்றும் பெருமையாகச் சொல்கிறோம். எனவே, தமிழைப் பாதுகாக்கிற பொறுப்பு நமக்கு உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறுவிதமான கலைகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு தமிழக அரசு முக்கியத்துவம் கொடுத்து, அதை ஆராய்ச்சி செய்து, கன்னியாகுமரி மாவட்டத்தை அகழ்வாராய்ச்சியிலே ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் முதுகலை படிப்பில்கூட தமிழ் இல்லாத நிலை. தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று கேட்கிறோம், இல்லை; நீதிமன்றத்தில் தமிழ் வேண்டுமென்று கேட்கிறோம், இல்லை. குறிப்பாக, ஐரோப்பா படையை தோற்கடித்த கேப்டன் De Lannoy கைது செய்யப்பட்ட அந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவம் குளச்சலிலே நடந்தது. அதெல்லாம் மறைந்துபோய் இருக்கிறது. சரித்திரத்தில் இல்லை. இதுபோன்ற மறைந்து போன சம்பவங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து, எதிர்கால சந்ததியினருக்கு தமிழின் புகழை சேர்ப்பதற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தமிழ் ஆராய்ச்சி மையம், ஓர் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று நான் மீண்டும் கேட்கிறேன். ஏனென்றால் நூற்றுக்கணக்கான கல்விச்சாலைகள் இருக்கின்றன; கல்லூரிகள் இருக்கின்றன. இன்றுவரை எந்த பல்கலைக்கழகமும் இல்லாத சூழ்நிலையிலே, கல்விக்குப் புகழ் சேர்க்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கிற வகையிலே, ஒரு தமிழ் ஆராய்ச்சிப் பல்கலைக்கழகமாவது அமைப்பதற்கு நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்பாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு.க.பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில் unitary universities-ஐ மத்திய அரசாங்கம் விரும்பாத நிலை வந்த காலத்திலிருந்து நாங்கள் ஏற்கெனவே வைத்திருந்த 3 extension centres-ஐ இப்பொழுது நடத்தவில்லை. உதகமண்டலத்தில் ஆதி திராவிடர் நலத் துறையினர் பழங்குடி ஆய்வு மையத்தை இப்போது நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இராமேஸ்வரத்தில் Marine archaeology setup செய்தோம். அதேபோல காஞ்சிபுரத்தில் தத்துவ

2018 ஜுலை 3]

மையம், சுவாமிமலையில் சிற்ப கலைக்கூடம் ஆரம்பிக்கிறோம். கண்டிப்பாக கன்னியாகுமரியில் தமிழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு extension centre *உருவாக்குவதற்கு கருத்துரு தயார் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, வெகுவிரைவில் நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

மாணவியர் விடுதி

***4255—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தமிழ்நாட்டின் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல